சத்தியம்
தர்மம்
சாந்தி
பிரேமை
அஹிம்சை

ஓம் சாயி ராம்

# சாயி மார்க்கம்

Sai Centre

இலங்கை ஸ்ரீ சத்ய சாயி நிலையங்களின்
காலாண்டு இதழ்

# சாயி மார்க்கம்
## SAI MARGAM (Tamil)

| மலர் 7 | ஒரே ஒரு மதம் | பகவானின் 75 வது ஆண்டு |
|---|---|---|
| இதழ் 18 | அது அன்பு எனும் மதம் | ஜனவரி – மார்ச் 2000 |

பொருளடக்கம்

| | |
|---|---|
| நீர் ஒழுக்கம் உள்ள ஒருவரா | 1 |
| பகவானின் ஒரு கடிதம் | 2 |
| எமது மன நிறைய ... | 3 |
| கருத்துக்கள், கேள்விகள், வேண்டுகோள்கள் | 4 |
| இன்பமும் துன்பமும் எங்கிருந்து எழுகிறது | 6 |
| உங்கள் சுகத்தைப் பாதுகாக்கவும் | 8 |
| கலியுக குரு பாபா | 9 |
| ஸ்ரீ லங்காவின் பகவான் ஸ்ரீ சத்திய சாயி மத்திய அறக்கட்டளை நிதியம் | 12 |
| நாங்கள் எங்களளவில் தெய்வீகமாக வேண்டுமென்று மனமொப்பி விரும்புகிறோமா | 14 |
| ஈஸ்வரம்மா | 16 |
| அவதாரங்கள் பற்றி | 20 |
| இளைஞர் பிரிவு | 21 |
| சேவை பற்றி தெய்வ ஞானிகள் | 23 |
| கும்பிடும் கைகளின் கதை | 24 |
| மகாவீரர் | 25 |
| சமணமதம் (ஜைனமதம்) | 26 |
| சமணமதம் பற்றிக் பகவான் சாயிபாபா | 27 |
| செய்திகள் | 28 |

| | |
|---|---|
| இலங்கையில் தனிப்பிரதி: | ரூபா 25/- |
| வருட சந்தா (4 பிரதிகள் தபால் செலவு உட்பட) | ரூபா 100/- |
| வெளிநாடு வருட சந்தா | US டொலர் 10 |

காசோலை பணக்கட்டளைகளை ஆசிரியருக்கு அனுப்பிவைக்கவும்

ஆசிரியர்:
பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம்
(நந்தி)

துணை ஆசிரியர்கள்:
ஸ்ரீ S. R. சரவணபவன்
ஸ்ரீ V K. சபாரத்தினம்

நிருவாக அலுவலகம்: 'சத்தியம்'
681/2 பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

ஓம் ஸ்ரீ சாயிராம்

## ஆசிரிய தலையங்கம்

# நீர் ஒழுக்கம் உள்ள ஒருவரா?

உங்கள் கைகளில் உள்ள சாயிமார்க்கம் புதிய நூற்றாண்டின் முதல் இதழாகும். எமது மத்திய இணைப்பாளர் ஸ்ரீ. சிவஞானம் ஐயாவின் சில கேள்விகளையும் வேண்டுகோள்களையும் இந்த இதழ் தாங்கி வருகின்றது. அவற்றை எல்லா சாயி அடியார்களும் முக்கியமாக சாயி நிலையத் தலைவர்களும் அங்கத்தவர்களும் மிகவும் கவனமாகக் கருத்திற் கொள்ள வேண்டும் என்று பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

அதற்கு முன்பாக பகவான் எம்மிடம் கேட்கும் ஓர் அடிப்படையான கேள்வியை ஞாபகப்படுத்துவோம். பகவான் எம்மைச் சுட்டிக் கேட்கிறார்? Are you a person of Character? நீர் ஒழுக்கமுள்ள ஒருவரா?

சாயி வாழ்வின் அடிநாதமே ஒழுக்கம் தான். ஒழுக்கம் தான் கல்வியின் நோக்கம். அது அன்பின் அறுவடை. அதன் வெளிப்படை சத்தியம், தர்மம், சாந்தி, அகிம்சை யாகும். ஒழுக்கம், தீய வழிகளில் நாம் சென்று ஆன்மீக வாழ்வை இழக்காது பாதுகாக்கும் எதிர்ப்புச் சக்தி. அதனால் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும். அது வாழ்விற்கு விழிப்பும் விழுப்பமும் தருகின்றது.

பகவான் கேட்ட அந்தக் கேள்வியின் வாக்கில் நாமும் நம்மைப் பல விதங்களில் விசாரணை செய்ய வேண்டும்.

சாயி நிலைய சூழலைப்பற்றி மட்டும் சிலவற்றை இங்கே சிந்திப் போம்.

- சமீப காலத்தில் சாயி நிலைய சூழலிலே சத்தியமும் தர்மமும் வெளிப்படையாகவே மீறப்பட்டதாகச் செய்திகள் உண்டு. அதற்கு என்ன காரணம்?
- சாயி நிலைய நிருவாகக் கூட்டங்களிலே ஆத்மீகஅமைதி இல்லாது, அரசியல் சாயலில் அசிங்கம் நிலவியதாகச் செய்திகள் உண்டு. அதற்கும் என்ன காரணம்?
- சாயி நிலையம் ஒரு புண்ணிய பூமி. அதன் பவித்திரம் மாசுபடும் வண்ணம் சில புனிதமான நிகழ்வுகளிலே படாடோபம் புகுத்தப்பட்டதாகச் செய்திகள் உண்டு. ஏன் இந்த விஷப் பரீட்சை?
- தீவிர சேவை செய்கிறோம் என்ற அப்பாவி ஆர்வத்தில் சிலர் அடிப்படையான நிருவாக ஒழுக்கத்தை மீறியதாகச் செய்

திகள் உண்டு. இந்தச் சீரகு லைவுக்கு என்ன காரணங்கள்?

மனித வாழ்வில் தவறுகள் நடப்பது எதிர்பார்க்கக் கூடியது. ஆனால் அவை திருத்தப்படாமல் விடுவதே பெரும் தவறு.

குற்றம் காணும் பொருட்டு அல்ல; காரணம் காணும் தேவையைக் காட்டுவதற்கே 'சாயி மார்க்கம்' இந்தச் செய்திகளை வைத்து சிந்திக்கின்றது.

சாயி நிலையத்தின் நல்லவர்களும் வல்லவர்களும் இவற்றைச் சிந்தித்து ஆவன செய்ய வேண்டும் என்று பகவானை பிரார்த்திக்கின்றோம்.

## பகவானின் ஒரு கடிதம்

Bhagavan Sri Sathya Sai Baba,
Prashanthi Nilayam P.O,
Ananthapur DT,
Andra Pradesh
515134
INDIA.

அங்கும் இங்கும், கோயில்களிலும் தேவாலயங்களிலும், பூமியிலும் வானத்திலும் நீண்ட தேடுதல்களின் பின், நீ இங்கே வந்திருக்கின்றாய். ஒரு வட்டம் சுற்றி விட்டு தொடங்கின இடத்தையே நீ அடைந்திருக்கிறாய். அதாவது உன் ஆத்மாவிடமே. உலகம் எல்லாம் யாரைத் தேடினாயோ, யாருக்காக கோவில்களிலும் தேவாலயங்களிலும் அழுது பிரார்த்தித்தாயோ, யாரை எல்லா மர்மங்களின் மர்மமாக முகில்களில் மறைந்திருக்கும் எனப் பார்த்தாயோ, அவர் அண்மையிலும் அண்மையாக இருப்பதைக் காண்கிறாய். அது நீதான்; உனது வாழ்வு, உடல், ஆத்மா என்ற உண்மை நிலை அதுதான். அதுதான் உனது குணம். அதை உறுதி செய், தெளிவாக்கு. அதுதான் உண்மை.

உண்மை ஒன்றுதான் ஒருவரின் உண்மையான நண்பன், உறவினன். உண்மையை கடைப்பிடித்து நேர்மை வழியிலே சென்றால் உனது உடலின் ஓர் உரோமம் கூட ஒரு போதும் காயப்படாது.

ஆசைகளைக் கடந்து அப்பால் செல்வதே தியானம், வேறு ஒன்றும் இல்லை. தீய சக்திகளுக்கு எதிராகப் போராடி மனதை அடக்கி வைக்கும் பலமே துறவு ஆகும்.

அன்புடன் ஆசிகள்

ஸ்ரீ சத்திய சாயி பாபா.

[நன்றி: SAI YUVAK, VOL ONE ISSUE ONE, NOV. 1999]

பகவானின் அருள் மொழிகள் தொடர்ச்சி ........

## எமது மனம் நிறைய ooooo

11. Life is ... Loving – Listening – Lifting – Learning.
வாழ்க்கை என்பது ... அன்பு பாராட்டுவது கவனித்துக் கேட்பது - உயர்த்துவது - கற்பது.

12. The greatest fear that man can have, is the fear of losing God's love.
கடவுளின் அன்பை இழக்கக் கூடும் என்ற பயம் தான், மனிதனின் மிகப் பாரிய பயம் ஆகும்.

13. Have no desires to place before God. Whatever He does with you, however He treats you, is the gift that He likes best to give you.
கடவுள் முன்னிலையில் எவ்வித விருப்பங்களையும் வையாதே. அவர் உனக்கு எதைச் செய்கிறாரோ, எப்படி அதைச் செய்கிறாரோ, அது உனக்கு மிகச் சிறந்ததென அவர் கருதுகின்ற அன்பளிப்பாகும்.

14. What God gives is never exhausted. What man gives never lasts.
கடவுள் தருவது என்றும் முடிவதில்லை. மனிதன் தருவது என்றும் நிலைப்பதில்லை.

15. That grace of God is like insurance. It will help you in your time of need without any limit.
கடவுளின் கருணை காப்புறுதி போல, அது உனக்கு எல்லை இல்லாது, தேவையான நேரம் உதவும்.

16. Do not seek to discuss evil in others, for the attempt will tarnish your own mind.
மற்றவர்களின் தீய குணங்களை விவாதிக்க முற்படாதே, ஏனெனில் அந்த முயற்சி உனது மனத்தையே மாசுபடுத்தும்.

17. The present is a product of the past, but it is also the seed of the future.
தற்காலம் சென்ற காலத்தின் அறுவடை, ஆனால் அது எதிர் காலத்தின் விதை கூட.

18. 3 D's
D = Devotion பக்தி
D = Discipline ஒழுக்கம்
D = Duty கடமை

(அருள்மொழிகள் தொடரும்)

## வேண்டுகோள்

பகவானின் பிரசித்தி பெற்ற சிறிய அருள் மொழிகளை எமக்கு எழுதி அனுப்புங்கள். ஆங்கிலம் மூலம் கட்டாயம் வேண்டும். தமிழ் மொழிபெயர்ப்பும் தந்தால் நல்லது. இதுவரை சாயி மார்க்கம் இதழ்களில் வந்தவற்றை அனுப்பவேண்டாம்.

நன்றி

ஆசிரியர்

ஓம் ஸ்ரீ சாயிராம்

### மத்திய இணைப்பாளர் ஸ்ரீ சிவஞானம் ஐயாவின் கருத்துக்கள், கேள்விகள், வேண்டுகோள்கள்

01. பஜனைக்கு வருபவர்களை அங்கத்தவர்களாகச் சேர்க்க முயலவும். இது அங்கத்தவர் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு அல்ல. எல்லாப் பக்தர்களுக்கும் நிலையத்திற்கும் இடையே உண்மையான ஒரு தொடர்பை ஏற்படுத்துவதற்குத் தான்.

02. ஆத்மீக சாதனை பற்றி பேசுவதைத் தவிர, தனிமனிதன், குடும்ப சாதனையை எவ்வாறு நீங்கள் ஊக்குவிக்கலாம்? பக்தர்களுக்கு என்ன நடைமுறை ஆலோசனையை நாங்கள் தரலாம்?

03. பாலவிகாஸ் வகுப்புக்களில் அதிக அளவு பிள்ளைகளை எப்படி சேர்க்கலாம்?

04. நிலையத்திற்கு வரும் பாலவிகாஸ் பிள்ளைகளின் பெற்றோருடன் பயன்தரும் தொடர்பு ஒன்றை ஏற்படுத்தியுள்ளீரகளா?

05. இளைஞர் பிரிவு பயன் தரக் கூடியதாக செயற்படுகிறதா? அதை எவ்வாறு பலப்படுத்த முடியும்?

06. நூல் நிலையத்தை உபயோகிப்பவர் தொகையை எவ் வாறு அதிகரிக்கலாம்? நூல்கள், சஞ்சிகைகள் பெறுவதற்கு உங்களுக்கு என்ன உதவி வேண்டும்?

07. ஒலி, ஒளிப்பதிவு நாடாக்களை உபயோகிக்கிறீரகளா?

08. உங்கள் பிரதேசத்தில் உதவி வேண்டிய மக்களின் எண்ணிக்கையை நீங்கள் ஆய்வு செய்து கண்டறிய முடியுமா?

09. அ) பிரசாந்தி நிலையத்தில்
ஆ) பிராந்திய நிலையில்
ஆலோசிக்கப்படும் செயற் திட்டங்கள் பற்றி எல்லா சேவா நிலையங்கள்,பஜனை நிலையங்களுக்கும் தெரியப்படுத்தப் படுகிறதா?

10. அ) சனாதன சாரதி
ஆ) உங்கள் சாயி மார்க்கம்

ஆகியவற்றின் சந்தாதாரர் தொகையை அதிகரிக்க முடியுமா?

11. உங்கள் நிலைய அங்கத்தவர்கள் கடைசி இந்த 2000 ஆண்டிலாவது தங்களுக்கிடையே சண்டை சச்சரவு செய்யாமல் இருப்பதற்கு ஏதாவது ஒரு செயல்முறையை ஆரம்பிக்க முடியுமா?

12. எங்களிடம் ஆங்கிலத்தில் போதிய நூல்கள் உண்டு. ஆனால் தமிழில் நூல்கள் போதாது. தமிழில் மொழிபெயர்க்கப்படும் நூல்களை அச்சிடுவதற்கு யாராவது உதவி செய்ய முன்வரவேண்டும். இது மிகவும் அவசியமாகும்.

13. சுவாமியின் போதனைகளை பக்தர்கள் மத்தியிலும் மற்றோர் இடையேயும் பரப்புவதற்கு உங்களிடம் செயற்திட்டம் உண்டா?

14. பொதுமக்களிடையே சாயி விழிப்புணர்வை ஏற்படுத்த என்ன செயற்றிட்டம் வைத்திருக்கிறீர்கள்? செய்யக்கூடியவை சில பின்வருமாறு:
பொதுக்கூட்டங்கள், செய்தித்தாள்களில் கட்டுரைகள், டி.வி நிகழ்ச்சிகள், வானொலி நிகழ்ச்சிகள், இளைஞர் இடையே கட்டுரைப் போட்டிகள், சுவாமியின் போதனைகளைப் பிரதிபலிக்கும் ஒளிப்பதிவு நாடாக்கள் என்பனவாம்.

15 பஜனையின் தரத்தை உயர்த்த முடியுமா?

16. மதங்களிடையே ஒற்றுமையை உண்டாக்கும் குறிக்கோளுடன், உங்கள் நிலையத்தில் எல்லா மதங்கள் சார்ந்த கருத்துப் பரிமாறல்களை ஏற்படுத்தமுடியுமா?

17. இலங்கையிலே ஒவ்வொரு நிலையமும் வாரத்திற்கு ஒரு முறை நிருவாகசபை (EXECUTIVE COMMITTEE) கூட்டமும், மாதம் ஒருமுறை முகாமைத்துவசபை (MANAGEMENT COMMITTEE) கூட்டமும், அரை வருட பொதுச்சபை (GENERAL MEMBERSHIP)கூட்டமும்வைக்க வேண்டும். இவை ஒழுங்காக உங்கள் நிலையத்தில் நடைபெறுகின்றனவா?

18. இலங்கையின் நான்கு பிராந்தியங்கள், ஒவ்வொன்றிலும் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை இணைப்புக் குழுக் கூட்டங்கள் நடைபெறவேண்டும். இவை (CO-ORDINATING MEETINGS) ஒழுங்காக நடைபெறுகின்றனவா?

19. மத்திய இணைப்பாளரும், மத்திய கவுன்சில் தலைவரும் கொழும்பில் வருடம் இருமுறை யூலையிலும் டிசம்பரிலும் கூட்டங்கள் வைப்பது உண்டு. இதற்கு இணைப்புக்குழு தலைவர்கள், உபதலைவர்கள், பகுதி இணைப்பாளர், தேசிய இணைப்பாளர், சஞ்சிகை ஆசிரியர்கள் சமூகம்தர வேண்டும்.

**இந்த உலகில் . . .**

எனது ஹாஸ்யம் பண்ணும் (JOKING) முறை உண்மையைக் கூறுவதுதான். இந்த உலகில் உண்மைதான் மிகவும் வேடிக்கையான பகிடி.

- ஜோர்ஜ் பேர்னாட் ஷோ

சிரடிசாயியின் வரலாற்றிலிருந்து ....... ..

## இன்பமும் துன்பமும் எங்கிருந்து எழுகிறது?

ஸ்ரீ. எஸ். ஆர். சரவணபவன்

தாஸ்கணு என்பவர் ஒரு கல்விமான். அவர் ஈசாவாஷ்ய உபநிடதத்திற்கு ஒரு விளக்கவுரை எழுத விரும்பினார். அதில் "ஆத்மா ஆனந்தமயமானது. இன்ப துன்பம் அதனை தீண்டுவதில்லை" என்று சொல்லப்பட்ட பகுதி அவருக்கு பூர்ணமாக விளங்கவில்லை. ஆகவே சிரடிசாயிபாபாவிடம் இதற்கான விளக்கத்தைக் கேட்கச்சென்றார். பாபாவிடம் அவர் நேரடியாக இக் கேள்வியைக் கேட்டார். பாபா இதற்கு நேரடியாக பதிலளிக்க வில்லை. 'இதற்கு பம்பாயிலுள்ள செல்வந்தரான காகா டிக்சித் என்பவருடைய வீட்டு வேலைக்காரி உனக்கு விளக்கம் தருவாள் நீ அங்கு செல்' என்றார். தாஸ்கணுவிற்கு ஒரே ஆச்சரியம். கல்வியறிவு இல்லாத வீட்டு வேலைக்காரி எப்படி உபநிஷதத்திற்கு விளக்கம் சொல்வாள் என்று அவர் பலவாறாக யோசித்தார். கல்விமானாகிய அவர் பம்பாய்க்குச் சென்று அவருடைய நண்பர் காகா டிக்சித்தின் வீட்டுக்குப் போய் அவர் வீட்டு வேலைக்காரியிடம், எப்படிக் கேட்பது என்ற கௌரவப் பிரச்சனையும் கூட எழுந்தது. ஆயினும் பாபா சொல்லைத் தட்டக் கூடாது என்று நினைத்து பம்பாய்க்கு அவருடைய நண்பர் வீட்டுக்குச் சென்றார். நண்பர் அவரை வரவேற்று தனது நீண்டநாள் நண்பனை சில தினங்கள் தமது வீட்டில் தங்கிச் செல்ல வேண்டும் என்று கேட்டு தனது வீட்டில் தங்க வைத்தார்.

### வேலைக்காரியின் பாடல்:

மறுநாள் அதிகாலை மிகவும் இனிமையான ஒரு குரல் கேட்டது. அழகான பாடல் ஒன்று மிக அருமையாக பாடப்பட்டது. அப் பாடலின் கருத்து பின்வருமாறு.

"கருஞ்சிகப்பு கலர்ப் புடவை
மிக அழகானது
மிக மென்மையானது
ஆகா! என்ன பூவேலை
அதற்கேற்ற மேலாடை
நான் அணியும் போது
என்ன ஆனந்தம்! என்ன ஆனந்தம்!"

("எனது அழகான பாவாடை பூவேலை செய்யப்பட்டது. மிக மிருதுவானது. அதற்கு ஏற்றதான மேற்சட்டை. இதனை அணியும் போது நான் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறேன்)

இப்பாடலை இரசித்தப்படி தாஸ்கணு அவர்கள் தனது படுக்கையை விட்டு எழுந்து யன்னலைத் திறந்து பார்த்தார். அவருக்கு அதிர்ச்சியாக இருந்தது. மிகவும் அழுக்கு ஏறிய ஒரு பாவாடையும், கிழிந்த மேலாடையையும் அணிந்து கொண்டு

அந்த வீட்டின் வேலைக்காரி சமையல் பாத்திரங்களை கழுவிக் கொண்டிருந்தாள். ஆனால் அவள் மிகவும் சந்தோசமாக பாடிக் கொண்டு தன் வேலைகளைச் செய்து கொண்டு இருந்தாள்.

## அநுதாபமும் புதிய பாவாடையும்.

இக்காட்சி அந்த வேலைக்கார சிறுமி மீது அநுதாபத்தை ஏற்ப டுத்தியது. அந்தப் பிள்ளையிடம் நல்ல உடுப்புக்கள் இல்லை. கிழிந்த உடுப்புக்களை அணிந்து கொண்டு கற்பனையில் நல்ல உடுப்புகளைப் பற்றிய அந்தப் பாடலைப் பாடுகிறாள் என எண்ணி வீட்டுக்காரரான காகா தீட்சித் என்பவரிடம் அனுமதி பெற்று அந்த வேலைக்காரச் சிறுமிக்கு பாடலில் கூறப்பட்டபடி ஒரு உடுப்பை வாங்கி அன்பளிப்புச் செய்தார். மிகவும் ஆனந்தத்துடன் அந்தச் சிறுமி அதனைப் பெற்றுக்கொண்ட போது உடனடியாக அந்த உடுப்பையே போடும்படி கேட்டுக் கொண்டார்.

அடுத்தநாள் அதிகாலை மீண்டும் அதே பாடல், அதே குரல், அதே மகிழ்ச்சி. தாஸ்கணு படுக்கையை விட்டு எழுந்து யன்னலூடாகப் பார்த்தார். வேலைக்காரச் சிறுமி புதிய உடுப்புக்களை அணிந்தபடி பாடிக்கொண்டு தன் வேலைகளைச் செய்துகொண்டு இருந்தாள். அவரு க்கும் சந்தோசம்.

## மீண்டும் பழைய பாவாடை:

அன்று இரவு அவள் தனது புதிய உடுப்பை மடித்து வைத்து விட்டு மீண்டும் தனது பழைய உடுப்பைப் போட்டுக்கொண்டாள். மூன்றாம் நாள் அதிகாலை அதே குரல், அதே பாடல், அதே மகிழ்ச்சி, தாஸ்கணு யன்னலைத் திறந்து பார்த்தார். முதல் நாள் அணிந்த பழைய கிழிந்த உடை, அதே குரல், அதே பாடல், அதே மகிழ்ச்சி. முதல் நாள் நல்ல உடை இல்லை ஆனால் கற்பனையில் பாடுகின்றாள் என நினைத்தார். இரண்டாம் நாள் பாடலில் வர்ணிக்கப்பட்டபடி உடை இருந்தது. ஆகவே மகிழ்ச்சியுடன் பாடுகிறாள் என நினைத்தார். ஆனால் மூன்றாம்நாள் அதே பழைய கிழிந்த பாவாடையை அணிந்து கொண்டு பாடும்போது பழைய உடுப்போ, புதிய உடுப்போ என்று எண்ணாது அதே ஆனந்தம், மகிழ்ச்சியுடன் பாடும் போதுதான் ஈஷாவாஷ்ய உபநிடதத்தில் கூறப் பட்டதை அனுபவபூர்வமாக உணர் ந்தார். அதாவது "சந்தோசமோ துக்கமோ மனம்தான். மனம் அதற்கு ஏற்றபடி மாற்றக் கூடியது. அதற்கே உரித்தான பல வழிகள் உண்டு. அது சொர்க்கத்தை நரக மாகவும் மாற்றும்; நரகத்தை சொர்க்கமாகவும் மாற்றும்."

ஷிரடிசாயிபாபா இக்கருத்தை பண்டிதருக்கு ஒரு வேலைக்காரி மூலம் அனுபவபூர்வமாக விளங்க வைத்து விட்டார்!."

# உங்கள் சுகத்தைப் பாதுகாக்கவும்

❖ பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா ❖

நீங்கள் ஒரு வயோதிபர், நோயாளி, மெலிந்தவர்,பலவீனமானவர் என்ற பொய்யான எண்ணத்தை மறக்கவும். சிலர் வருடங்களைக் கணக்கிடுவர், வயது ஏறுகிறதே என்று கவலைப்படுவர், மரணத்தைஎண்ணி கோழைகளாக நடுங்குவர். ஞாபகததில் வைக்கவும்: குதூகல மகிழ்ச்சியானது சுவர்க்கம்; மனச் சோர்வானது நரகம். செய்வதற்கென்று ஒரு வேலையைக் காணவும் அதை மிகவும் நன்றாகச் செய்யவும், அதிலே மகிழ்வு அடையவும்.

நோய்க்கும் சுகத்திற்கும் மனிதனின் மனமே காரணம். உடல் நேர்த்தியாக இருப்பதற்கு மட்டும் உணவு உண்ணவும். உண்மையைக் காண்பதற்கு, அதாவது கடவுளை உணர்வதற்கு உடல் உதவ வேண்டும். டொக்டர்கள் வைற்றமின் குறைபாடு பற்றி பேசுவார்கள். நான் கூறுகிறேன் "வைற்றமின் G குறைபாடு" என்று. கடவுளின் பெயரை (GOD'S NAME) கூறிக் கொண்டிருப்பதை நான் சிபார்சு செய்கிறேன். அது தான் வைற்றமின் - G.

உணவில் இருந்து வரும் அதிர்வுகளில் இருந்தே உணவின் தரம் நிர்ணயிக்கப்படுகிறது. மனிதன் மூன்று விதமான உணவை உண்கிறான். சாத்வீக உணவு என்பது அன்பு, நற்குணம், பலம், ஆனந்தம், பரிவு ஆகியவற்றை விருத்தி செய்கிறது. ராஜச உணவு என்பது மனத்தைத் தூண்டுகிறது, கிளறுகிறது, மயக்கிறது, பசி தாகத்தை உயர்த்துகிறது. இனி,தாமசஉணவு என்பது சோர்வடையச் செய்கிறது, குழப்புகிறது, நோய்களை உண்டாக்குகின்றது. உணவை யாருடன் சேர்ந்து உண்கிறீர்கள், எங்கே உண்கிறீர்கள், எப்படியான பாத்திரங்களில் உணவு சமைக்கப்பட்டது, உணவைத் தயாரித்தவர், பரிமாறுபவர் ஆகியோரின் மனங்களைத் தாக்கும் உணர்வுகள் இவை அனைத்தும் உணவை உண்பவரின் மனத்தில் மிக நுண்ணிய தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

தேக சுகம் மிகவும் முக்கியமாகும். தேகம் தகுதி நிலையில் இருந்தால், மனத்தின் செயற்பாடும் இலகுவாக இருக்கும். உடல் நோயுற்றால், மனமும் தடுமாறும். உணவின் மூலமே, பறவைகளும் விலங்குகளும் தமது சுகத்தைப் பாதுகாக்கின்றன. நாய்க்கு காய்ச்சல் வந்தால், சாப்பிட மறுக்கும். ஆனால் மனிதன், டாக்டரின் எச்சரிக்கைகளையும் மறுத்து கள்ளமாக உண்பான். அவன் துணிந்து தகாத உணவையும் குடி வகைகளையும் உட்கொண்டு விட்டு, குளிகைகள், மாத்திரைகள், ஊசிகள் ஆகியவற்றின் உதவியோடு சீவிக்கிறான். ஒருவர்

கொதித்து ஆறிய நீரை ஏராளமாக குடிக்கவேண்டும், சாப்பிடும்போது அல்ல, அதற்கு முன் அல்லது உணவின் பின். ஒரு நேர அட்ட வணையின்படி ஒழுங்கான இடை வெளி விட்டு உண்ணவும். உணவு நன்றாக சமிக்கும் வண்ணம் ஏதா வது வேலை நாள் முழுதும் செய்யவும்.

சோம்பல், இச்சைகளுக்கு இடம் கொடுப்பது ஆகியவற்றின் விளைவு தான் வியாதி. கடின வாழ்வின் வரப்பிரசாதமே சுகம். உங்கள் கண்கள், காதுகள், நாக்கு, கைகள், கால்கள் ஆகியவற்றை அடக்கி வைக்கவும். மனத்தை, கடவுள் மேலும் உயர்ந்த எண்ணங்கள் மேலும் பதிய வைக்கவும். தளர்ச்சியடைய வைக்கும் அல்லது கிளர்ச்சி செய்யும் எதையும் படிக்க வேண்டாம். மனத்தைக் களைக்க வைக்கும் அல்லது தூண்டும் சினிமாக்களைப் பார்க்க வேண்டாம். உங்கள் மேல் நம்பிக்கை இழக்க வேண்டாம். உங்கள் உடலிலே அமைக்கப்பட்ட தெய்வம் நீங்கள். மனத் திருப்தி ஒரு நல்ல ரொனிக். உணவை மிதமாக உண்டால், எல்லாம் சரியாகும். அதிக உணவு மனத்தைக் குழப்பும். சரியான அளவு உணவு மகிழ்ச்சி தரும்.

(நன்றி: KAN – SAI LIGHT, JAPAN OCT 1994)

ஓம் ஸ்ரீ சாயிராம்

## கலியுக குரு பாபா

டொக்டர் கனகரத்தினம் சிவநேசன்

### கலிகாலம்

இன்று அநேகமாக உலகெங்கும் மக்கள் அமைதியற்று உண்மையான சாந்தியில்லாத சந்தோசம் நீங்கிய நிலையில் சந்தேகம், பொய், பேராசை, கோபம், வெறுப்பு, எரிச்சல், பொறாமை, பெருமைகளினால் ஆட்கொள்ளப்பட்டு சகோதரர்களுக்கிடையே சமூகங்களுக்கிடையே, நாடுகளுக்கிடையே ஏன் பல்வேறு மதங்களுக்கிடையேயும் கருத்து வேற்றுமை ஏற்பட்டு குழப்பங்கள், கலகங்கள் கூடி ஒருவரையொருவர் அழிக்கும் சூழ்நிலை இருக்கின்றது. இதனை சிலர் கலியுககாலம் என வர்ணிக்கிறார்கள்.

### வேறு யுகங்களில் குருவை நாடி ........

ஏறத்தாழ தற்போதய நிலை சரித்திரத்தில் காலத்துக்குக் காலம்

ஏன் வெவ்வேறு யுகங்களிலும் கூட இருந்திருக்கின்றது. அவ்வப்போது அதனால் பாதிப்புற்றவர்கள் ஒரு குருவை நாடி அதிலிருந்து மீட்சி அடைந்துள்ளார்கள். முக்கியமாக சூரனின் ஆட்சியில் தேவர்கள் கஷ்டம் அடைந்தபோது எல்லாம் வல்ல சிவபெருமானை குருவாக ஏற்றார்கள். விஷ்ணுவின் ஒன்பது அவதாரங்களில் குறிப்பாக இராவணனினதும், துரியோதனனினதும் ஆட்சியில் முறையே இராமரும் பஞ்சபாண்டவர்களும், விசுவாமித்திர முனிவரையும், கிருஷ்ணபரமாத்மாவையும் குருவாக ஏற்று மீட்சியை அடைந்தார்கள். மேலும் கம்சன், நரகாசூரன் ஆட்சியில் கஷ்டப்பட்டவர்கள். மீண்டும் கிருஷ்ணரை நாடி அவரை குருவாக ஏற்று காப்பாற்றப்பட்டார்கள். இன்னும் கஜமுகன், மகிசாசூரன் ஆகியவர்களினால் பாதிப்புற்றவர்கள் முறையே பிள்ளையார், துர்க்கையம்மனை குருவாக வணங்கினார்கள். அத்துடன் பன்னிருதிருமுறைகளை உள்ளடக்கிய அறுபத்துநான்கு நாயன்மார்களின் சரித்திரங்களிலும் பதினெட்டுப் புராணங்களிலும், பதின்நான்கு மெய்கண்டசாஸ்திரங்களிலும் அடியார்கள் அவ்வப்போது ஒரு குருவை நாடி அருள் பெற்றார்கள்.

**சரித்திர காலம்:**

உரோம சாம்பிராட்சியத்தில் யூதநாட்டு மக்கள் கஷ்டப்பட்டுக் கொண்டு இருக்கும் போது இயேசுபிரான் அங்கு அவதரித்து அங்குள்ளவர்கள் எல்லோருக்கும் குருவாகி ஒரு புதிய மதத்தையே உருவாக்கினார். வட இந்தியாவில் கௌதமபுத்தர் அவதரித்து குருவாகி பௌத்த மதத்தை உபதேசித்தார். இது அன்று போரில் பல்வேறு வெற்றிகளை ஈட்டிய அசோகச் சக்கரவர்த்தியின் மனதை போரினால் சாதித்தது ஒன்றுமல்ல வென்று சடுதியாக உணரவைக்கும் அளவுக்கு புத்தரின் போதனை அதிசக்தி வாய்ந்ததாக இருந்தது. தனது மக்கள் இருவரையும் புத்த மதத்தை பரப்புவதற்கு இந்த குருவின் போதனை அத்திவாரம் இட்டது. அரேபியா நாட்டில் மக்கள் துன்புற்றபோது நபிகள் நாயகம் அவதரித்து அசரீதியில் கூறியவற்றை மக்களுக்கு விளக்கிக்கூறி இஸ்லாம் மதத்தின் குருவானார். சீக்கிய மக்களுக்கு இதேபோல் குருநானக் குருவாகினார்.

இவற்றைப் போன்று இன்று எம்மத்தியில் எம்மை பல்வேறு கஷ்டங்கள் மத்தியிலும் வழிநடத்தி காப்பாற்றி கலியுகக் குருவாக பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா காட்சி தருகிறார். பாபாவின் தனித்துவமான சக்தி என்னவென்றால் பிறப்பில் இருந்து தெய்வீகத்தை வெளிக்காட்டி பல்வேறு மதங்களையும் அரவணைப்பது ஆகும்.

**மதங்கள் கூறுவது:**

**அன்பு - ஒழுக்கம் - சேவை**

இராமகிருஷ்ண பரமகம்சர் கூறினார் "இறுதி உண்மை ஒன்றுதான். பல்வேறு மதங்கள் அதனை வெவ்வேறு வழிகளில் கூறுகின்றன" என்று சுவாமி விவேகானந்தரும், தெய்வீக வாழ்க்கைச் சங்கத்தின் ஸ்தாபகரான சுவாமி சிவானந்த மகாரிஷியும் மேற்கூறிய கருத்தை உலகெங்கும் பரப்ப அத்திவாரம்

இட்டார்கள். பகவான் பாபா அவர்கள் அதனை ஒழுங்காக நடைமுறைப்படுத்தி வேற்றுமையில் ஒற்றுமை கண்டுள்ளார். சாயிபாபா தனது உரையில்: வேதாகமம் பூட்டன் போன்றதென்றால் பௌத்தம் ஒரு மகனைப் போலவும், கிறிஸ்தவமதம் பேரனைப் போலவும், இஸ்லாம் மதம் பேரனுக்குப் பிறந்த மகனைப் போலவும் இருக்கிறது என விபரித்துள்ளார். சுவாமி தனது போதனைகளை மீண்டும், மீண்டும் வலியுறுத்துவது அன்பையும் நல்லொழுக்கத்தையும் தான். பதினெட்டு புராணங்களை சுருங்கக் கூறின் 'ஒரு பொழுதும் தொந்தரவு செய்யாது எப்பொழுதும் உதவி செய்' எனப்பொருள்படும் என சுவாமி விளக்கிக் கூறுகிறார். கல்வி, செல்வம், வீரம் போன்ற பல செல்வங்களைவிட நல்லொழுக்கம் தான் சிறந்தது என அடித்துக் கூறுகின்றார்.

**சாயி மயமாகும் 21 ஆம் நூற்றாண்டு:**

இன்று உலகெங்கும் பாபாவின் இயக்கங்கள் வளர்ந்து இருபத்தொராம் நூற்றாண்டு எங்கும் சாயி மயமாகும் என கூறப்படுகிறது. உலகமே வியக்கத்தக்க விதத்தில் புட்டபத்தியில் இலவசமாக பீடங்களில் கல்வியும், வைத்தியசாலையில் அதிஉயர்தர சிகிச்சையும் அளிக்கப்படுகின்றது. மிகவும் சாதாரண மக்களுக்கு, பணவசதியில்லாதவர்களுக்கு கிடைப்பதற்கு அரிதான இருதய அறுவைச் சிகிச்சை, சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை போன்றவை இலவசமாக உலகெங்கும் இல்லாதவாறு இன்று அங்கு அளிக்கப்படுகின்றது. மேலும் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு மிகவிரைவில் இயக்கப்படவிருக்கிறது. கரும யோகத்தை முற்றும் அறியாதவர்கள் ஏன் பாபா எல்லோரையும் காப்பாற்றினால் என்ன, எல்லோருக்கும் தரிசனம் கொடுத்தால் என்ன என விமர்சிக்கிறார்கள். இதிகாச புராண காலங்களில் இருந்து தேவதூதர்களை விமர்சிப்பவர்கள் இருந்திருக்கிறார்கள். இவர்கள் கருமயோகத்தையும் ஆத்மஞானத்தையும் பற்றி முற்றிலும் அறியாதவர்கள். பாபா தன்னை வணங்கும்படி ஒருபோதும் கூறியதில்லை. ஆனால் ஒரு இந்து பாபாவின் இயக்கத்தில் ஈடுபடும் போதும் ஒரு தூய இந்துவாகவும், ஒரு கிறிஸ்தவர் பாபாவை வணங்கும் போது ஒரு உண்மையான கிறிஸ்தவராகவும், ஒரு பௌத்தர் பாபாவின் வழிகாட்டலை உணரும் போது ஒரு புனித பௌத்தராகவும், ஒரு இஸ்லாமிய மதத்தவர் பாபாவைப் பின்பற்றும் போது சகோதரத்துவ தத்துவத்தைப் பேணும் ஒரு அன்பான இஸ்லாம் மதத்தவராகவும் மாற்றப்படுகின்றார்.

இன்று ஆன்மிகம் மனித வாழ்க்கைக்கு இன்றியமையாதது என உணரப்படுகின்றது. உலக சுகாதார ஸ்தாபனம் தனது 337 வது உலகளாவிய மகாநாட்டில் சுகாதாரம் என்பது உடல் மன சமூக சுகத்துடன் ஆன்மீக சுகத்தையும் அடையும் போது ஏற்படும் நிலை என வரைவிலக்கணத்தில் கூறுகின்றது.

முன்பு எந்த அரசினாலும் சாதிக்க முடியாத நீர்ப்பாசன திட்டங்களை பாபா நடைமுறைப்படுத்தியுள்ளார். மனிதனுக்கு தேவையான அடிப்

படை வசதிகளான நீர் உணவு இருப்பிடம் போன்றவைகளை மற்ற வர்களுடன் பகிர்ந்து வாழவேண்டும் என பாபா போதிக்கின்றார்.

ஆகவே நாம் பகவான் சத்திய சாய் பாபாவை ஒரு நடமாடும் தெய்வமாக கலியுக குருவாக ஏற்று பயன் அடைவோமாக.

## ஸ்ரீலங்காவின் பகவான் ஸ்ரீ சத்தியசாயி மத்திய அறக்கட்டளை நிதியம்

## (BHAGAVAN SRI SATHYA SAI CENTRAL TRUST OF SRI LANKA)

[இந்த நிதியம் 21 ஓகஸ்ட் 1999 அன்று ஸ்தாபிக்கப்பட்டது. அதன் அறங்காவலர்களின் பெயர்களை, 1999 ஜூலை - செப்டெம்பர் சாயி மார்க்கம் இதழில் பிரசுரித்திருந்தோம்]

குறிக்கோள்கள்

அறக்கட்டளையின் பொதுவான குறிக்கோள்கள் பின்வருமாறு:

01. பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபாவின் செய்தியையும் போதனைகளையும் சென்று பரப்புவது.

02. பகவான் காட்டியுள்ள சத்தியம், தர்மம், சாந்தி, பிரேமை, அகிம்சை ஆகியவற்றின் அடிப்படை உண்மைகளை செயன்முறைகளாலும் முன்மாதிரியாலும் பரப்புவது.

03. வேதங்கள், உபநிடதங்கள், சாத்திரங்கள், புராணங்கள், மற்றும் சனாதனதர்ம இலக்கியம் ஆகியவற்றின்அறிவைப் பரப்புவது.

04. உலகின் அனைத்து பெரிய சமயங்களின் உன்னத, மேலான, உயர்ந்த நீதிநெறிகளைப் படிப்பதற்கும், விருத்தி செய்வதற்கும் உதவுவது.

05. சமயங்களுக்கு இடையே அமைதி ஒற்றுமையை வளர்ப்பது.

06. மனிதகுலத்தின் மத்தியிலே அமைதியும் புரிந்துணர்வும் வளர்ப்பது.

07. அறங்கட்டளை நிதியம் அங்கீகரித்த பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றில் படிப்பதற்கு தகுதி வாய்ந்த மாணவருக்கு பண உபகாரம் மூலம் உதவுவது.

08. உதவி வேண்டிய மாணவருக்கு நூல்கள், கருவிகள், உடைகள், கடன்கள், பண உதவிகள் கொடுத்து உதவுவது.

09. கல்வியை விருத்தி செய்யும் முறையாக, கல்வி வகுப்புக்கள், விரிவுரைகள், கருத்துரைகள், கல்விச் சுற்றுலாக்கள் ஆகியவற்றை நடாத்துவது.

10. உதவி தேவையானவர்கள், வறியவர்கள், வயோதிபர்கள், ஊனமுற்றோர், பெற்றோரை இழந்த பிள்ளைகள் ஆகியோருக்கு இல்லங்கள் அமைத்து கொடுப்பது.

11. துயர நிலையிலிருப்போருக்கு உலர் உணவுப் பொருட்கள், உணவு, உடை மற்றும் வேறு உதவிகள் தருவது.

12. நோயுற்றோருக்கு வைத்திய சாலைகள், கிளினிக்கள் கட்டுவது, ஏற்படுத்துவது.
13. நோயுற்றோருக்கு மருந்துகளும் சிகிச்சையும் வழங்குவது.
14. நோய்களைத் தடுக்கும் முறைகளாக பல்வேறு கல்விமுறைகளை (விரிவுரைகள், கருத்தரங்குகள், சுற்றுலாக்கள், கண்காட்சிகள் ஆகியவற்றை) ஏற்படுத்துவது.
15. இலங்கையில் இதுவரை உள்ள அல்லது இனிமேல் வரப்போகும் ஸ்ரீ சத்தியசாயி நிறுவனங்களின் அறக் கட்டளைகளை நிதிய செயற்பாடுகளை இணைத்து வழி காட்டுவது.
16. இதுவரை குறிப்பிட்ட குறிக்கோள்களைப் பெறுவதற்கும் விருத்தி அடைவதற்கும் வேறு எந்த செயற்பாடுகளையும் ஏற்படுத்துவது.

**குறிப்பு:**
(மேலே தரப்பட்டுள்ளது ஆங்கில மூலத்தில் இருந்து தமிழாக்கப்பட்ட சுருக்கமான மொழிபெயர்ப்பு. சட்ட ரீதியான நடவடிக்கைகளுக்கு ஆங்கில மூலமே செல்லுபடியாகும் - ஆசிரியர்.)

**அறக் கட்டளை நிதியத்தின் அதிகாரங்கள்:**

அதிகாரங்கள் சட்ட மொழியில் மிக விரிவாக எழுதப்பட்டுள்ளன. சுருக்கமாக சில குறிப்புக்கள் மட்டும் இங்கே தரப்பட்டுள்ளன.

1. நிதியத்திற்குக் காணிகள் கட்டடங்கள், வாங்க, விற்க, நன்கொடையாக ஏற்க, குத்தகைக்கு விட அதிகாரம் உண்டு.

2. சாயி நிலையங்களின் அசைவற்ற ஆதனங்களைப் பாதுகாக்கும் உரிமை உண்டு. ஆனால் நிலையங்கள் அவற்றை நிரவகிக்கும்.

3. பண நன்கொடைகளைப் பெற்றுக் கொண்டு அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களுக்கு பண உதவிதரும். அந்த உதவியின் தொகை, நிலையங்கள் தாமாக செலவு செய்யும் தொகையைச் சார்ந்ததாகவே இருக்கும். (COUNTER-PART FUND)

## தொழில் நுட்பவியல்

தொழில் நுட்பவியலால் ஒரு கத்தியை உற்பத்தி செய்யலாம். ஆனால் ஒரு மனிதனின் ஞானம்தான், அதனால் காய்கறிகளை வெட்டுவதா, அல்லது இன்னும் ஒருவருடைய தொண்டையை அறுப்பதா என்று தீர்மானிக்கும்

- பாபா

ஓம் ஸ்ரீ சாயிராம்

# நாங்கள் எங்களளவில் தெய்வீகமாக வேண்டுமென்று மனமொப்பி விரும்புகிறோமா?

ஸ்ரீ. க. சிவபாதவிருதயர் - வவுனியா

இந்த விடயத்தை கொஞ்சம் அமைதியாக மனதிலெடுத்து விளங்கிக் கொள்வோம். எங்கள் ஒவ்வொருவரிலும் உள்ளுறையும் தெய்வீகத்தை மிளிரச் செய்ய வேண்டுமென்பது அவதாரத்தின் நோக்கம். அந்த நோக்கத்தைப் பற்றிய தெளிவான பார்வை எங்களுக்கு இருக்கிறதா? இல்லாவிட்டால், அவதாரத்தையும் அதன் மகிமைகளையும் அறிந்து கொண்ட அளவுக்காவது, ஏற்றுக்கொண்ட அளவுக்காவது தெளிந்து கொள்ள முயல்கிறோமா?

'உன்னுடைய படம் பத்திரிகையில் வந்திருக்கிறது' என்று யாரோ ஒருவர், நாம் வெறுக்கும் சீலமற்ற ஒருவர் சொன்னபோது கூட அந்தப் பத்திரிகையைத் தேடிப்பிடித்து எங்களுடைய படத்தைப் பார்க்க அவசரம் காட்டும் நாம் "நீ தெய்வீகமானவன்" என்று அவதாரம் ஒன்று அருகிலே வந்து ஊரறிய, உலகறிய சொல்கின்ற போது, அதை எப்படி அர்த்தம் செய்து கொள்கிறோம்?

அவதாரம் சொல்வதை சாதாரணமாக கேட்டுக் கொண்டு அதைப்பற்றிய எந்த விழிப்புணர்வுமில்லாமல், வழமையான கிரியைகளையும் வழிபாடுகளையும் செய்து கொண்டிருந்தால் ஒரு அவதாரகாலத்தில் வாழ்ந்தும் ஆத்மீக வாழ்க்கை வாழக் கூடிய ஓர் அரிய சந்தர்ப்பத்தை இழந்துவிடமாட்டோமா?

அவதாரம் சொல்பவற்றை சரியாக விளங்கிக் கொண்டு, அவற்றை ஜீரணித்து, எமது கலம் ஒவ்வொன்றிலும் செறிய வைத்து, எங்கள் வாழ்க்கையின் பிரதிபலிப்புக்களை அவதாரத்திற்கு அர்ப்பணமாக்க நாம் ஆயத்தமாக வேண்டாமா?

நாம் பகவானை விரும்புகிறோம். பல நன்மைகளைப் பெற்றிருக்கிறோம். ஆனால் பகவான் என்ன விரும்புகிறார் என்பதை அறிந்து கொள்வதில் ஆர்வம் காட்டுகிறோமா?

என்னுடைய வாழ்க்கை என்னுடைய செய்தி என்று சொன்னவர் "உன்னுடைய வாழ்க்கை என்னுடைய செய்தி" என்று இப்போது சொல்லியிருக்கிறாரே.

"உங்கள் பணி ஆரம்பமாகிவிட்டது. என்னுடைய பக்தர்களுக்கான வார்த்தைகள் இவைதான். உங்கள் வாழ்நாளில் நீங்கள் ஒவ்வொருவரும் ஒரு ஒப்பற்ற, ஒரு அருமையான பங்கை ஆற்றவுள்ளீர்கள். உங்களின் உள்ளார்ந்த பக்தியின் ஒளிக்கதிர்களை பரவச் செய்யுமாறு அழைக்கிறேன்." என்று தமது தெய்வீக செய்தியில் பகவான்

அறிவித்துள்ளார். எனக்கு, உனக்கு எங்கள் ஒவ்வொருவருக்கும் விடுக்கப்பட்ட அழைப்பு இதுவாகும். பக்தியின் ஒளிக்கதிர்களைப் பரவச் செய்யுமாறு சொன்னதை விளங்கிக் கொள்ள நாம் இந்தச் செய்தியின் அடுத்த வரிகளைக் கவனிக்க வேண்டும்.

"உங்களுடைய பங்கை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு எப்பொழுதும் என்னிலே மையப்பட்டு இருங்கள். உங்களின் உள்ளே உள்ள இதயத் தூய்மையை எல்லா மனிதர்களோடும் எல்லா உயிரினங்களோடும் பகிர்ந்து கொள்ளுங்கள். பணியின் பலனைப் பெற முயலாதீர்கள்" என்கிறார்.

தனது தெய்வீகம் எங்களில் பிரதிபலிக்க வேண்டும். இந்தப் பிரதிபலிப்பு ஒரு பெருக்கல் தாக்கத்தை (MULTIPLIER EFFECT) ஏற்படுத்தி ஒரு ஆத்மீக அதிர்வை ஏற்படுத்த எங்களளவிலான முயற்சியை நாம் ஒவ்வொருவரும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இலக்கை நிர்ணயித்த பகவான் அதற்கான பாதையையும் தந்திருக்கிறார் ஒன்பது ஒழுக்கக் கோவை தான் அது. இலக்கும் பாதையும் தெரிந்தால் பயணத்தின் பெறுபேறுகளை நாம் சரிபார்த்துக் கொள்ளலாம்.

அவதார காலத்தில் வாழுகிற நாம், அவதாரத்தை ஏற்றுக் கொள்கின்ற அளவு பாக்கியம் செய்த நாம், அவதார கால வாழ்வின் இனிமையை ஓரளவு தெரிந்து கொள்ளும் அதிர்ஷ்டம் பெற்ற நாம் எமது விருப்பங்களை முரட்டுப்பிடியாக வைத்துக் கொள்வதை விடுத்து அவதார சங்கல்பங்களை நிறைவேற்ற யோக்கியதை உள்ள கருவிகளாக ஆக வேண்டும். அந்த விருப்பத்திற்கு முன்னுரிமை கொடுப்போம்.

ஒல்லையாறி உள்ளமொன்றி கள்ள
மொழிந்து வெய்ய
சொல்லையாறி தூய்மை செய்து
காமவினையகற்றி
நல்லவாறே வந்துன் நாமம்
நாவில் நவின் றேத்த
வல்லவாறே வந்து நல்காய்
வரிவலமேயவனே

(திருஞானசம்பந்தர்)

## COMMITTEE

"கொமிற்றிகள் ஏன் சரியாக இயங்குவதில்லை என்று தெரியுமா?" என்று ஒரு உரையாடலின் போது கேட்டார் பகவான் சாயிபாபா. அவரே விடையையும் தந்தார்: "COMMITTEE என்ற பெயரே ஒன்றைத்தான் குறிப்பிடுகிறது: COME TO TEA!" (தேநீர் பருக வாங்கோ!)

# ஈஸ்வரம்மா

(சில குறிப்புக்களும் வாழ்வின் நிகழ்வுகளும்)

குறிப்புக்கள்:

பெயர்: ஈஸ்வரம்மா (ஈஸ்வராம்பா அல்ல)

கணவன் பெயர்: பெத்த வெங்கப்ப ராஜு - நடிகர்

கணவனின் தகப்பன்: ஸ்ரீ கொண்டம ராஜு

கணவனின் தாயார்: லக்ஷ்மம்மா

பிள்ளைகள்:
1. மகன் - சேஷம ராஜு தெலுங்குமொழி வித்துவான், ஆசிரியர்
2. மகள்-வெங்கம்மா
3. மகள்- பர்வதம்மா (இடைவெளியில் நான்கு கருச்சிதைவுகள். அடுத்தது எட்டாவது கர்ப்பம்)
4. மகன்- சத்திய நாராயணா (பாபா)
5. மகன்-ஜானகிராம் (தற்போது புட்டபர்த்தியில் இருக்கிறார்)

நிகழ்வுகள்:

1. பிரவேசம்:

ஈஸ்வரம்மா சொன்னது: எனது மாமி (லக்ஷ்மா) ஒருநாள் எனக்குச் சொன்னா, "நான் சத்திய நாராயணா தேவனை கனவில் கண்டேன். கடவுளின் ஆணையால் உனக்கு ஏதாவது நடந்தால் பயப்படாதே" என்று. அன்று காலை நான் கிணற்றில் தண்ணீர் அள்ளிக் கொண்டு நின்றேன். ஒரு பெரிய நீல ஒளிப் பந்து என்னை நோக்கி வந்தது; நான் மயக்கமுற்று விழுந்து விட்டேன். அது என்னுள் ஊர்ந்ததை உணர்ந்தேன்.

பாபா சொன்னது: அம்மா சொன்னதைக் கேட்டீர்களா? எனது பிறப்பு பிரவேசம்தான், பிரசவம் அல்ல.

2. ஈஸ்வரம்மாவின் (எட்டாவது)கர்ப்பகாலத்தில்

ஈஸ்வரம்மாவின் மாமன் ஸ்ரீகொண்டம ராஜு கனவிலே வேங்க அவதூதர் சுவாமியைக் கண்டார். "தயாராக இரு" என்று சுவாமி உத்தரவிட்டார். எதற்காக தயாராய் இருப்பது என்று கூறவில்லை. அத்துடன் அவரின் கணவர் பெத்த வெங்கப்ப ராஜு பல நாள், இனிய சங்கீத ஒலிகளினால் நித்திரையிலிருந்து எழுப்பப்பட்டார். நாடக ஒத்திகை அறையில் வைக்கப்பட்டிருந்த இசைக் கருவிகள் தன்னிச்சையாகவே கீதத்தை எழுப்பின. இசைப்பது யாராக இருக்கும்? தேவ தூதர்கள்.... காந்தருவர்கள் ...... கின்னரர்கள்!

வெங்கப்ப ராஜுவுக்கு எல்லாம் மாயமாக இருந்தது. சாஸ்திரிகளின் வீடுவீடாகச் சென்றார்.

"சங்கீதம் இனிமையாகவும் இதமாக வும் இருக்கிறதா?" என்று அவர்கள் கேட்டார்கள்.

"ஆமாம், சுருதியும் தாளமும் மெய் சிலிர்க்க வைக்கின்றன" என்றார் வெங்கப்ப ராஜு.

"வீட்டிலே கர்ப்பவதி ஒருத்தி இருக் கிறாளா?"

"ஆமாம்"

"ஆஹா! கர்ப்பத்தில் இருக்கும் குழந்தையை மகிழ்விக்க கடவுளர் அல்லவா இசை இசைக்கின்றார்கள்" என்றனர் சோதிடர்.

### 3. குழந்தை பிறந்தநாள்:

23 நவம்பர் 1926

கார்த்திகை மாதம், திங்கட்கிழமை, அதிகாலை 5.06 மணி விடிந்தால் செவ்வாய், காலை 4 மணிக்கே மாமி லக்ஷ்ம்மா சத்திய நாராயணா பூஜை செய்வதற்கு பூசகர் ஒருவரின் வீட்டுக்குச் சென்றுவிட்டா அவவை உடனடியாக வரும்படி அழைப்பு விட்டார்கள். ஈஸ்வரம்மாவிற்கு பிரசவநோ தொடங்கிவிட்டது. லக்ஷ்ம்மா பூஜை முடிந்தபின் பிரசா தத்தை ஏந்தி வந்தா. ஈஸ்வரம்மா விற்கு கொடுத்தா. மகன் பிறந்தார்.

அறையின் ஓரமாக பாய் ஒன்றில் தடித்த பாய் விரிப்பு விரிக்கப் பட்டிருந்தது. குழந்தையை அதன் மேல் பாட்டி கிடத்தினா. எதிர்பாராத விதமாக குழந்தையின் அக்கம் பக்கமாக பாய் விரிப்பு எழுந்து விழுந்தது. உடனே குழந்தையை தூக்கி நெஞ்சோடு அணைத்தார். பாய்விரிப்பின் கீழே பாம்பு! ஆதி சேஷனோ?

### 4. வாழ்விலே வேதனைகள்:

ஓர் அவதாரத்தின் தாய் என்றால் வேதனைகள் இல்லாமல் இருக்குமா?

அ) தனது மகன் எல்லோரையும் போல் இருப்பதையே ஒரு தாய் விரும்புவார். ஹிந்துபூர் அல்லது அனந்தபூரிலிருந்து புதிய உடைகள் வரும். பாட்டன் அல்லது தகப்பன் குடும்பங்களில் உள்ள எல்லா பையன்களையும் கூவி அழைப்பர் "விருப்பமா னதை எடுங்கோடா". எல்லோ ரும் எடுப்பார்கள். கடைசியில் விடப்பட்ட ஒன்றை சத்தியா எடுப்பார். "சத்தியம், உனக்கு எது வேணும்? சொல்லு, நான் தருகிறேன் என்பா அம்மா. "எனக்கு ஒன்றும் வேண்டாம். நீங்கள் தருவது போதும்" என்பார் சத்தியா. ஏன் என் மகன் இப்படி இருக்கிறான்?

ஆ) வீட்டிற்கு வெளியிலே, சித் திராவதி நதிக்கரையிலே மற்றப் பிள்ளைகளோடு சிரி த்து வேடிக்கை செய்து, துள்ளி, பாய்ந்து, குதித்து, பஜன் பாடி மகிழும் சத்தியா, வீடு வந்ததும் ஏன் ஆழமான யோசனையுடன் பாரமுள்ள மனத்துடன் இருக்கிறான்? முகத்தில் ஏன் இவ்வளவு நிதானம்? "பிரம்மஞானி" என்று வயது போனோர் அவனுக்கு ஒட்டிய லேபல் கேலியா? அல்லது புகழ் வார்த்தைதானா?

இ) கொண்டப்பா வாத்தியார் கொடுத்த நோட்ஸை சத்திய நாராயண ராஜு மட்டும் எழுதவில்லை. கேட்டதற்கு அது தனக்குத் தேவைபோல் தோன்றவில்லை என்றான். வாங்கில் மேல் சத்தியாவை நிற்கச் சொன்னார் ஆசிரியர். நின்றான். ஆனால் ஆசிரியரால் நாற்காலியிலிருந்து எழும்ப முடியவில்லை. அது ஒட்டிக் கொண்டது. இந்த நிகழ்வால் ஈஸ்வரம்மாவும் ரத்னாகரம் குடும்ப அங்கத்தவரும் மிகவும் கவலையுற்றனர். பையனின் படிப்பு நின்று விடுமோ என்று அம்மா பயந்தார். சத்தியாவை அழைத்து ஈஸ்வரம்மா எச்சரித்தார்: "நீ பாடசாலையிலிருந்து வெளியேற வேண்டிவரும். வேறு பாடசாலைகள் உன்னைச் சேர்க்க மாட்டார்கள். நீ ஒன்றுக்கும் உதவாத ஜடம் ஆவாய். மாடு மேய்க்கத் தான் நீ தகுதியானவன்." இப்படிக் கூறிய தாயின் மனம் மகிழுமா?

ஈ) விரைவில் மனம் மகிழ்ந்தது. பேனுகொண்டா தாலு காலிலேயே முதல் மாணவனாக சத்தியா பரீட்சையில் தேறினான். புக்கபட்டணம் மக்கள் இந்த வெற்றியைக் கொண்டாடுவதற்கு, சத்தியாவை நகரிலே ஊர்வலமாக அழைத்துச் சென்றனர். ஈஸ்வரம்மாவுக்குப் பெருமையும் மகிழ்ச்சியும். ஆனால் அத்துடன் மனத்திலே வேதனை தோன்றியது. எனது மகனுக்கு மற்றவர்களின் கண்ணூறு என்னெல்லாம் செய்யுமோ?

சத்தியா வீடு வந்ததும் அவனைச் சுற்றி தேங்காய்கள் உடைத்தார். கற்பூர தீபம் காட்டினார்

உ) 1940 மார்ச் மாதம்

சத்தியாவுக்குத் தேள் (கொடுக்கான்) கொட்டியது. மயக்கம், பின்பு தெளிவு தொடர்ந்து உணவு நீர் மறுப்பு, ஏதோ உலகில் இருப்பத போல் புலம்பல். அண்ணா சேஷமராஜு சோதிடர்கள், அர்ச்சகர்கள், ஹோமியோ வைத்தியர்கள், இயற்கை வைத்தியர்கள், மாவட்ட வைத்திய அதிகாரி அனைவரையும் கொண்டுவந்தார். "வியாதி" மாறவில்லை. சத்தியாவோ அமைதியாக இருந்தான். சத்தியாவை ஒரு கெட்ட ஆவி பிடித்துக் கொண்டது என்று குடும்பத்தினர் நம்பினர். ஒரு மாந்திரீகன் வரவழைக்கப்பட்டான். அந்த மாந்திரீகன் சத்தயாவுக்குச் செய்த சித்திரவதையை உலகில் எந்தத் தாயும் காணப்படாது.

ஊ) 23 மே மாதம் 1940:

சத்தியா "நான்தான் சாயி பாபா. மனிதகுலம் அழியாமல் காப்பாற்றுவதற்கு திரும்பவும் வந்துள்ளேன்". என்று பிரகடனம் செய்து "என்னை ஒவ்வொரு வியாழனும் வணங்குங்கள்" என்று கேட்டுக் கொண்டார்.

20 ஒக்ரோபர் 1940:

பாடசாலையில் இருந்து வந்த சத்தியா புத்தகங்களை அண்ணாவின் வீட்டு வாசலுக்கு வெளியே எறிந்து

விட்டு "நான் உங்களுக்கு உரியவன் அல்ல, நான் போகிறேன். எனக்கு வேலை உண்டு" என்றார். வீதியில் நின்றபடி சொன்னார்: "என் பக்தர்கள் என்னை அழைக்கின்றார்கள். நான் செய்ய வந்த வேலை முடியவில்லை. ஆனால் இப்போது தொடங்குகிறேன்".

இவை எல்லாம் இப்போது மகிழ்ச்சி தரும் சரித்திரம். ஆனால் அன்று "என்மகன் என்னுடன் இருக்க வேண்டும், படித்து பட்டம் பெற்று கலெக்ற்ராக, கடைசி ஒரு கல்லூரி அதிபராக இருக்க வேண்டும், விவாகம் செய்ய வேண்டும், பேரப்பிளைகளைக் காண வேண்டும் என்று எண்ணிய ஒரு கல்வி இல்லாத, சாதாரண, கிராமத்து நடுத்தர வயதுப் பெண் ஈஸ்வரம்மாவுக்கு எப்படி இருந்திருக்கும்?

## 5. தெய்வத்தின் அம்மா வானுலகில் அமரரானார் - 06 மே மாதம் 1972

பங்களுரிலே "சமர்" கால வகுப்புக்கள் நடைபெற்றன. மாணவர்கள் காலை 6 மணிக்கு நகர சங்கீர்த்தனத்திற்கு சென்றனர். 7 மணிக்கு காலை உணவு. பகவான் அவர்களுக்கு மிக அண்மையில் தரிசனம் கொடுத்தார். ஈஸ்வரம்மா வழமை போல் குளித்து விட்டு காப்பி குடித்து விட்டு உள்விறாந்தையில் இருந்தா. இருந்தாற்போல் குளியல் அறைக்குச் சென்றவாறு "சுவாமி சுவாமி சுவாமி!" என்று அழுது அழைத்தா. உடனே சுவாமி "வருகிறேன், வருகிறேன்" என்றார். அந்த வேளை ஈஸ்ரவம்மாவின் மூச்சு இறுதியாக நின்றது. "இதைப்போல் நலம் வேறு உண்டோ? ஒரு சிலருக்குத்தான் அந்த வேளை சுவாமி ஞாபகத்திற்கு வருவார். அந்த நேரம் மகள் வெங்கம்மாவும் அவவின் மகள் சைலஜாவும் பக்கத்தில் நின்றனர். ஆனால் ஈஸ்வரம்மா அழைத்தது சுவாமியைத்தான்"! என்கிறார் பகவான்.

## 6. ஈஸ்வரம்மா தினம் - குழந்தைகள் தினம்

ஒவ்வொரு வருடமும் மே மாதம் 6ம் திகதி குழந்தைகள் தினமாகக் கொண்டாடப்படுகின்றது. அந்தத் தினத்தில் நாம் கலைநிகழ்ச்சிகள் மூலம் தாய் என்ற தெய்வம் பற்றிக் குழந்தைகளுக்கு வலியுறுத்த வேண்டும். சாயி பக்தர்களிடையே எத்தனை பெண் பிள்ளைகளுக்கு ஈஸ்வரம்மா என்ற அழகான பேர் வைத்திருக்கின்றோம்.

(விடய ஆரரம்: EASWARAMMA - THE CHOSEN MOTHER BY. N. KASTURI)

**உங்கள் மகளுக்கு; மருமகளுக்கு; பேரப்பிள்ளைக்கு ஈஸ்வரம்மா என்ற பெயர் வைத்ததும் சாயி மார்க்கம் ஆசிரியருக்கு தபால் அட்டை மூலம் அறிவியுங்கள்.**

**- ஆசிரியர்**

ஓம் சாயிராம்

# அவதாரங்கள் பற்றி ..........

திருமதி. சரஸ்வதி கனகரத்தினம் - கோப்பாய்.

1999 - பகவானின் ஜெயந்தி தினமன்று கோப்பாய் ஸ்ரீ சத்திய சாயி நிலையத்தில் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் உபஅதிபர் திருமதி. சரஸ்வதி கனகரத்தினம் ஆற்றிய ஆன்மீக சொற்பொழிவின் சுருக்கம்.

உலகில் அரியதாகிய மானிடப்பிறவி எடுத்த நாம் அப்பிறவியின் பயனை அடைவதற்கு இறைவனை வணங்க வேண்டும். பஜனை, பூஜை, தியானம் இவை எல்லாம் மனதைக் கட்டுப்படுத்தி எண்ணங்களை தூய்மையாக்க உதவுகின்றன. இந்த வகையில் இந்த நிலையத்தில் நீங்கள் செய்யும் இந்த நல்ல வழிபாட்டு முறை அதில் கலந்து கொள்ளும் யாவரின் இதயங்களையும் தூய்மையாக்கும் என்பதில் சந்தேகமில்லை. உங்களுடைய சர்வமதப் பிரார்த்தனை என்னை மிகவும் கவர்ந்து விட்டிருக்கின்றது. சமய சமரச மனப்பான்மையையும், சகோதரத்துவத்தையும் ஏற்படுத்தவல்ல நல்லதொரு அம்சம் இதுவாகும். சேவை செய்வதே ஒரு வகையில் சிறந்த பூஜை என்கிறார்கள். இறைவனுடைய அவதாரங்களே எத்தனையோ சேவைகள் செய்வதாக அமைந்தது என்பது எல்லோரும் அறிந்த ஒரு விடயம். எடுத்துக்காட்டாக பாரதியார் கூறிய கண்ணன் பாட்டில் அதே இறைவன் "நண்பனாய், மந்திரியாய், நல்லாசிரியனாய், சேவகனாய்" வந்து தன் பக்தனுக்கு சேவை செய்ததாக அறிகிறோம். கண்ணன் மாடுகள் மேய்த்தமை, கிருஷ்ணன் அவதாரத்தில் பார்த்தனுக்கு தேர் ஓட்டியமையும் அவதாரத்தில் செய்த சேவைதான், இவற்றையெல்லாம் உணர்ந்து நாங்கள் மக்களுக்கு சேவை செய்வதை மகேஸ்வரனின் சேவையாக கருதி அதை மேற்கொள்ள வேண்டும்.

இறைவன் மனிதனாக அவதாரம் செய்த வேளைகளில் இப்படித்தான் வாழ வேண்டும் என்று பல்வேறு முன்மாதிரி காட்டியுள்ளார் என்பதையும் நாம் இங்கு கவனத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டும். இரக்கம், அன்பு, மன்னிப்பு, சகோதரத்துவம் யாவும் பல்வேறு சந்தர்ப்பங்களில் வெவ்வேறு சமயத்தில் காட்டப்படும் நல்ல வாழ்க்கை முறைகளாகும். கிருஷ்ணாவதாரத்தில் பாரதக் கதையில் வரும் கிருஷ்ணன் பாண்டவருக்காக கௌரவரிடம் தூது செல்கின்றால், அங்கு அவர்கள் அவரை அன்பாக வரவேற்ற போதும், வஞ்சனையால் பொறி அமைத்து அதன்மீது ஆசனமிட்டு அமர வைக்கின்றனர். ஆசனத்தில் அமர்ந்த கிருஷ்ணர் பொறியினுள் விழுகின்றார். விழுந்தவுடன் பெரிதாக விசுவரூபம் எடுத்து முடி ஆகாயத்திலும், அடி பாதாளத்திலும் பொருந்தும்படி நின்று நிமிருகின்றார். அரச சபையினர் உட்பட அண்ட சராசரம் யாவும் அஞ்சி நடுங்கி வணங்கி நின்றன. பொறுத்தருளும்படி வேண்டிக் கொண்டனர். இறைவன் அங்கு மன்னித்துப் பழையபடி

ஜ்ஷித் தனது அலுவல்களைக் கவனித்துச் செய்கின்றார். இந்த மன்னிக்கும் மனப்பாங்கு எமக்கெல்லாம் சிறந்த வழிகாட்டியாகும். ஜேசுநாதர் அவதாரத்தில் இறைவன் "ஒரு கன்னத்தில் அடித்தவனுக்கு மறு கன்னத்தையும் கொடு" என்று போதித்தார். இப்படியான மனப்பாங்கு எமக்கு வருமானால் நாம் நிச்சயமாக இறைவனுக்கு சேவை செய்யதவராவோம்.

நபிகள் நாயகம் மானுக்குப் பிணை நின்று வேடனுக்கு உபதேசம் செய்தமை, புத்தர் அம்பு பட்டு வீழ்ந்த அன்னப்பறவைக்காக தேவதத்தனிடம் பரிந்து பேசியமை யாவும் இறைவன் சகல ஜீவராசிகளிடமும் அன்புடனும் கருணையுடனும் வாழ வேண்டுமென்று எமக்கு வழிகாட்டிய சம்பவங்களேயாகும். பகவான் இக்காலத்தில் தமது அடியார் வீட்டு பூனைக்குக் கூட இரக்கப்பட்டு உணர்ந்து வீபூதி வழங்கிய கதையை நீங்கள் அறிவீர்கள்.

"உலகில் தர்மம் குலைந்து அதர்மம் மேலோங்கும் போது தானே அவதாரம் செய்து தர்மத்தைக் காப்பாற்றுவதாக கண்ணன் பகவத் கீதையில் கூறியுள்ளார். இதன்படி இன்று அதர்மம் மேலோங்கிய சூழலில் தர்மத்தைக் காக்க பகவான் அவதாரம் செய்தருளியுள்ளார். அவர் காட்டும் நெறியில் நின்று நாம் தர்மத்தை நிலைபெறச் செய்ய நாம் எல்லோரும் முயற்சிக்கவேண்டும் என உங்களை வேண்டி விடை பெறுகின்றேன்."

ஜெய் சாயிராம்

ஓம் சாயிராம்

இலங்கை ஸ்ரீசத்திய சாயி நிறுவனம்

## இளைஞர் பிரிவு

ஸ்ரீ சத்திய சாயி நிறுவனத்தில் இளைஞர் பிரிவு குறிக்கோள்களுடனும் திட்டச் செயற்பாடுகளுடனும் இயங்குவது நாம் அறிந்ததே. இலங்கையின் தேசிய இளைஞர் பிரிவு இணைப்பாளர் ஸ்ரீ. ஏ. புலேந்திரன் ஆவார். ஒவ்வொரு சத்திய சாயி நிலையம், சாயி பஜனை நிலையம் ஆகியவற்றில் உள்ள இளைஞர்கள் தம்மைப் பதிவு செய்ய வேண்டும் என்பது அவரது வேண்டுகோள். அதற்காக ஒரு பதிவுப் படிவம் உண்டு. அதன் மாதிரி கீழே தரப்பட்டுள்ளது. இளைஞர்கள் பெரும்பாலும் இதனைப் பூர்த்தி செய்திருப்பார்கள். எனினும் நிலைய மற்ற அங்கத்தவர்களும் இதனை அறிந்திருப்பது நல்லது. மேலும் இது போன்ற படிவங்களை வேறு அங்கத்தவர்களுக்கும் தயார் செய்து, பதிவு செய்து வைப்பது பல விதமான செயற்பாடுகளுக்கு உதவும். ஏனெனில் அதன் மூலம் அங்கத்தவர்களின் தகமைகள், திறமைகள், செயற்படக்கூடிய

துறைகள் ஆகியவற்றை அறிந்து கொள்ள முடியும்.

## இளைஞர் பதிவுப் படிவம்

01. நீர் சாயி நிறுவனத்தில் ஒரு அங்கத்தவரா? ஆம் இல்லை (வட்டமிடவும்)
02. ஆம் எனில், சாயி நிறுவனத்தில் எத்தனை வருடங்கள் அங்கத்தவராக இருக்கிறீர்?
03. நீர் எந்த நிலையத்தை,பஜனை மண்டலியை சேர்ந்தனீர்?
04. தகமை: திரு திருமதி செல்வி
05. முழுப்பெயர்:
06. வீட்டு விலாசம்:
07. தொலைபேசி எண்:
வீடு/ வீட்டுக்கு அண்மையில்:
வேலைத்தலம்:
08. e மெயில் விலாசம்:
09. பிறந்த திகதி:
10. வயது:
11. நீர் தற்போது மாணவன்/மாணவியா? ஆம் இல்லை
12. நீர் தற்போது தொழில்செய்கிறீரா? ஆம் இல்லை
13. உமது உத்தியோகம் என்ன என்று விளக்கவும்(உம்: ஆசிரியர், மருத்துவர், கொம்பியூற்றர் என்ஜினியர், அக்கவுண்டன்சி மாணவன், பல்கலைக்கழக மாணவன், A/L மாணவன், O/L மாணவன் இப்படியாக)
14. தற்போது தொழில் பார்த்தால், வேலைத்தலத்தின் பெயர், விலாசம் தரவும்.
15. உமது ஆகக்கூடிய கல்வித் தராதரம் தரவும் (உம்: பட்டதாரி, CIMA பகுதி கூறவும், A/L, O/L)
16. பின்வரும் மொழிகளில் உமது திறமை என்ன? ஆகக் கூடியதற்கு 1 போடவும்; ஆகக் குறைந்ததற்கு 3 என இடவும்.
ஆங்கிலம்
தமிழ்
சிங்களம்
17. உமது வாழ்க்கையில் அரும் பெரும் செயல் மூன்றை குறிப்பிடவும் (உம்: ஓட்டப் பந்தயம் வென்றது, சமூகசேவை, பரீட்சையில் சித்தி, சபை முன் பாடியது, பொது மேடையில் பேசியது என்பன.)
18. நீர் மிகவும் திறமையாக இயங்கும் ஐந்து பகுதிகளைக் குறிப்பிடவும் (உம்: பொது மேடைப் பேச்சு, பாடுவது, நடிப்பது, இசைக்கருவிகள் இசைப்பது, மக்களுடன் நன்கு பழகுவது, தையல், படிப்பது, எழுத்து,சுருக்கெழுத்து, தட்டெழுத்து என்பன)
19. நீர் பங்குபற்றும் நிலையம்/ மண்டலியின் பெயர் தரவும்.
20. நீர் பஜனைக்கு போவதுண்டா? ஆம் இல்லை.
21. ஒரு மாதத்தில் எத்தனை தடவை பஜனைக்குப் போவீர்?
22. நீர் உமது நிலையத்தில் உத்தியோகம் வகிக்கிறீரா? ஆம் இல்லை
23. ஆம் எனில் என்ன பதவி?
24. நீர் பங்குபற்றிய இளைஞர் செயற்பாடுகளை எழுதவும், (உம்: சமூகசேவை, பாட்டு, நாடகம், பஜனை, நிலைய சோடனை என்பன)
25. இளைஞர் பிரிவின் என்ன செயற்பாடுகளில் ஈடுபட விரும்புகிறீர்?
26. நீர் அதில் எவ்விதத்தில் பங்களிப்பீர்?
27. ஒரு வாரத்தில் எத்தனை மணித்தியாலம் இளைஞர் சேவைகளுக்கு ஒதுக்கமுடியும்?
28. பாலவிகாஸ் வகுப்புக்களில் நீர் கற்றதுண்டா? ஆம் இல்லை

• எல்லோரையும் நேசி, எல்லோருக்கும் உதவி செய்.
• எப்போதும் உதவிசெய் ஒரு பொழுதும் தீமை செய்யாதே.
• நாம் முயற்சி செய்தால் எதுவும்செய்யலாம், எவ்வளவும் செய்யலாம், எப்போதும் செய்யலாம்.

**** ஜெய் சாயிராம் ****

# கும்பிடும் கைகளின் கதை

(பல வீடுகளின் வரவேற்பு ஹோலில் கும்பிடும் கைகளின் படம் அல்லது செதுக்கு சித்திரம் பார்த்திருப்பீர்கள். அதன் கதையை ALBRECHT DVRER (1471 – 1528), FRANZ DVRER ஆகிய இரு சகோதரர்களின் கதை என்றும் கூறலாம். அதை வரைந்தவர் அல்பிரெக்ற் டியூரர். அன்பும் தியாகமும் மண்டிய கதையை இங்கே தருகின்றோம். மனித மேம்பாடு கற்பிப்பதற்கு இது மிகவும் தகுதியானது.)

அல்பிரெக்ற் டியூரர், ஃபிரான்ஸ் டியூரர் ஆகிய இரு சகோதரர்கள் சுமார் 500 ஆண்டுகளுக்கு முன் ஜேர்மன் தேசத்தில் வாழ்ந்தார்கள். மிகவும் ஏழைகள். இருவரும் சித்திரக் கலைஞராக வருவதற்கு மிகவும் விரும்பினர். தம்பி அல்பிரெக்ற், அண்ணன் ஃபிரான்ஸுக்கு கூறினான்: "அண்ணா எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. நான் ஒரு கூலியாளராக (labourer) உழைத்து உன்னைப் படிப்பிக்கிறேன். சித்திரக்கலைப் படிப்பு முடிந்ததும் நீ வேலை செய்து என்னை சித்திரக் கல்லூரிக்கு அனுப்பு".

ஆனால் அண்ணா தன்னிலும் தனது தம்பி திறமையுள்ளவன் என்று நினைத்து, "தம்பி அல்பிரெக்ற் நீ முதலில் படிக்கப் போ. நீ திரும்பியதும் நான் போகிறேன்" என்று கூறி அவனை அனுப்பினான்.

அல்பிரெக்ற் பல வருடங்களாக மிகச் சிறந்த ஓர் ஆசிரியரின் கீழ் பயின்றான். சித்திர வல்லுனர் ஆனான். அத்தனை வருடமும் அண்ணா ஃபிரான்ஸ் டியூரர் கஷ்டப்பட்டு உழைத்து படிப்புக்குப் பணம் அனுப்பினான்.

படிப்பு முடிந்து அல்பிரெக்ற் வீடு திரும்பினான். அந்தோ! பரிதாபம் ! அவன் அண்ணாவின் கைகள் கடின உழைப்பினால் கடினமாகி உருமாறி ஒரு உழைப்பாளியின் கைகளாக மாறிவிட்டன. ஒரு பென்சிலைக்கூட அவனால் சரியாக பிடிக்க முடியவில்லை. தம்பி அல்பிரட்டால் பேச முடியவில்லை. கண்களில் கண்ணீர் கலங்க, தன் அண்ணாவின் கைகளைப் பற்றி கண்களில் புதைத்துக் கூறினான்:

"அண்ணா, மனித இதயங்களுடன் பேசக் கூடிய ஒரு படம் வரையப் போகிறேன். தியாகத்தையும் அன்பையும் பிரதிபலிக்கும் இந்தக் கைகள்தான் அந்தப்படம்"

500 வருடங்கள் ஓடி விட்டன அந்த தமையனின் கைகள் இன்றும் வணங்கும் கைகளாக உலகமெல்லாம் தெய்வீகத்தை இயம்புகின்றன.

29. ஆம் எனில் எத்தனை வருடங்கள்.

30. சமீபத்தில் என்ன சாயி இலக்கியம் வாசித்தீர்?

31. நீர் உங்கள் வீட்டில் ஒழுங்காக பஜனை வைப்பதுண்டா? ஆம் இல்லை

# சேவைபற்றி தெய்வஞானிகள்

(தொகுப்பு டாக்டர்(திருமதி) ஜெயதேவி கணேசமூர்த்தி)

✣ "போதிசத்வாக்கள், சோர்வின்றி எந்நேரமும் அடிமைமனப்பான்மை யின்றி, தலைமை மனப்பான்மை யுடன் செயற்படுவார்கள். அவர்கள் பேருக்காகவோ, புகழுக்காகவோ செயற்படுவதில்லை. தமது சேவையை மற்றவர்கள் ஏற்பதையோ, வெறுப்பதையோ மனதில் கொள்வதில்லை. புகழையும், குற்றம் கூறுவதையும் பொருட் படுத்த மாட்டார்கள்."

- கௌதம புத்தபகவான்.

✣ "நான் பசியுடன் இருந்தபோது அன்னமிட்டாய்.
தாகத்துடன் இருந்தபோது குடிக் கத்தந்தாய்
அறிமுகமற்றவனாய் வந்தபோது அடைக்கலம் தந்தாய்
உடை இல்லாதபோது உடுக்க த்தந்தாய்
நோய்வாய்ப்பட்டபோது என்னைப் பராமரித்தாய்
மறியலில் இருக்கும் போது என்னைப் பார்க்க வந்தாய்
இச்செயல்கள் எல்லாம் எனக்குச் செய்த சேவையே."

- இயேசுக் கிறிஸ்துநாதர்

✣ "அல்லாவையன்றி வேறு ஒன்றையும் வழிபடாதே.
பெற்றோர்களை மதித்து சேவை செய்
இனத்தவர்கள், அநாதைகள், தேவைப்படுவோருக்கு சேவைசெய்
மனிதருடன் அன்பாகப் பேசி, வறியவருக்குக் கொடுக்க வேண்டிய தர்மத்தைக் கொடுத்துவிடு

- தெய்வநூல் குர்ஆன்

✣ "கோயில் சந்நிதியில் சமர்ப்பிக்கும்போது அவை வெளியில் நடமாடும் தெய்வங்களை சேர்வதில்லை.
ஆனால், வெளியில் நடமாடும் தெய்வங்களுக்கு நாம் சமர்ப்பித்தால், அது தெய்வத்தை அடையும்."

- சுவாமி விவேகானந்தர்

✣ பகவான் சத்தியசாயி பாபா பின்வரும் கூற்றுக்களில் எல்லாவற்றையும் அடக்கியுள்ளார்

- மானவ சேவையே மாதவ சேவை.
- உதவிசெய்யும் கரங்கள் வழிபாடு செய்யும் இதழ்களை விட மேன்மையானவை

நமது சாயி பஜனைகளிலே சர்வமதப் பாடலின் போது நாம் வணங்கும் சமயப் பெரியார்களில் ஒருவர் மகாவீரர். அவர் சமண மதத்தைச் சேர்ந்தவர்.

# மகாவீரர்

(கி. மு 599 - கி. மு 527)

இந்தியாவில் வழங்கி வரும் மிகப் பழைய மதங்களுள் சமணமதம் ஒன்று. இதை இந்தியாவெங்கும் பரப்பிய பெரியார் மகாவீரர்.

மகாவீரருடைய இயற்பெயர் வர்த்தமானர். இன்று பீகார் என வழங்கும் மகத நாட்டில் பாடலி புத்திரத்திற்கு அருகில் குண்டலபுரம் என்ற ஊரில் கி. மு 599 இல் இவர் பிறந்தார். இவருடைய தந்தை சித்தார்த்தர் ஒரு சிற்றரசர். இளமையிலேயே வர்த்தமானரின் மனம் துறவறத்தை நாடியது. அரச குடும்பத்தில் பிறந்த இவர் முப்பதாம் வயதில் தம்முடைய செல்வத்தையெல்லாம் மக்களுக்கு வழங்கிவிட்டுத் துறவியானார். கடுந் தவம் புரிந்து சீரிய ஞானம் பெற்றார். கடுந்தவத்தினால் விருப்பு வெறுப்புகளை வென்றதால் இவரை "மகாவீரர்" என்று அழைக்கலாயினர்.

இவருக்கு முன்பே சமணமதம் இந்தியாவில் இருந்து வந்தது. சமண மதத்தின் கொள்கைகளை வகுத்தவர்கள் தீர்த்தங்கரர்கள். இவர்கள் 24 பேர். இவர்களில் முதலாமவர் ரிஷபதேவர். தீர்த்தங்கரர்களின் வழி நின்று கொல்லாமை, பொய்யாமை, கள்ளாமை, பிறர்மனை நயவாமை, பேராசையின்மை முதலிய நல்லறங்களை மகாவீரர் மக்களுக்குப் போதித்தார். இவரை கடைசித் தீர்த்தங்கரர் என்பார்கள்.

மகாவீரர் இல்லறம், துறவறம் இரண்டையும் மக்களுக்குப் போதித்தார். "இல்லறமே நல்லறம். இல்லறம் நடத்திய பின் வீடுபேறு பெற விரும்புவோர் துறவறம் மேற்கொள்ள வேண்டும்" என்று இவர் வலியுறுத்தினார். இவ்விரு அறநெறிகளுடன் உலகியல் அரசியல் முறைகளையும் போதித்தார். இவருக்கு பல அரசர்களும் அறிஞர்களும் சீடர்களாயினர். மகாவீரர் தம் 72ம் வயதில் பவாபுரி என்னும் இடத்தில் மறைந்தார். (ஆதாரம்: குழந்தைகள் கலைக் களஞ்சியம், தமிழ் வளர்ச்சிக் கழகம், தொகுதி ஏழு)

ஆசிரியர்கள் வாழ்க்கை முழுவதும் மாணவராக இருத்தல் வேண்டும். அதாவது வெறுமனே கற்றலில் மட்டும் ஈடுபடாது சாதனைகளிலும் ஆழ்ந்து இருத்தல் வேண்டும். ஒளிவீசும் ஒரு விளக்கிலிருந்துதான் ஏனைய விளக்குகளை கொழுத்த முடியும். ஒளி வீசாத வெறும் திரியிலிருந்து ஏனைய திரிகளுக்கு ஒளி கொடுக்க முடியாது

- பாபா -

# சமண மதம் (ஜைனமதம்)

இந்தியாவில் வழங்கிவரும் மிகப் பழைய மதங்களுள் சமண மதமும் ஒன்று. இதை 'ஜைன மதம்' என்றும் கூறுவர். இம்மதத்தைப் பின்பற்றுபவர்கள் சமணர் அல்லது ஜைனர் எனப்படுவர்.

ஆரியர்கள் கி. மு 1500 இல் இந்தியாவிற்கு வருவதற்கு முன்னரே இந்தியாவில் சமணமதம் தோன்றியிருந்தது. இம்மதத்தின் கொள்கைகளை வகுத்தவர்களை தீர்த்தங்கரர்கள் என்பர். இவர்கள் 24 பேர். சமணமதத்தின் அடிப்படையான கொள்கை, உயிரகளைக் கொல்லக்கூடாது என்பதாகும். இதனை முதன் முதலில் போதித்தவர் ரிஷபதேவர். இவர்தான் முதலாவது தீர்த்தங்கரர். கடைசி தீர்த்தங்கரர் வர்த்தமானமகாவீரர். இவர் கி.மு 6ம் நூற்றாண்டில் வாழ்ந்திருந்தவர். சமண மதத்தை நாடெங்கும் பரவச் செய்தவர் இவரே. நல்லொழுக்கத்திற்கு முதலிடம் கொடுத்து அதை வற்புறுத்துவதில் சமணமதம் தலைசிறந்தது. நல்லொழுக்கத்தை அஹிம்சை, வாய்மை, களவுசெய்யாமை, பிரமசரியம், தவம் என ஐந்து விரதங்களாக வகுத்துள்ளனர். சமணத் துறவிகள் இந்த ஐந்து விரதங்களையும் தவறாமல் கடைப்பிடிக்க வேண்டும். துறவிகள் அல்லாதவர்கள், பிரமசரியத்திற்குப் பதில் கற்புடைமையையும், தவத்திற்குப் பதில் பேராசையின்மையையும் கடைப்பிடிக்க வேண்டும். இவ்விரதங்களில் எல்லாம் அகிம்சையே முதன்மையானது. பண்டைக்காலத்தில் சமணர்கள் நடந்து செல்லும் போது, காலில் சிறு பூச்சிகள் கூட சிக்கி இறந்துவிடாமலிருக்க மயில் தூவியினால் தரையைப் பெருக்கிக் கொண்டே நடப்பார்களாம்!

சமணமதம் முதலில் வடஇந்தியாவில் தான் பரவியது. சந்திரகுப்தன் காலத்தில் வடக்கில் கடுமையான பஞ்சம் ஏற்படவே ஏராளமான சமணர்கள் தென்னிந்தியாவில் குடியேறினர். அவர்கள்தாம் தென் நாட்டில் இம்மதத்தைப் பரப்பினார்கள். கங்கர், சாளுக்கியர், கதம்பர், ராஷ்ட்டிரகூடர் முதலிய தக்காண அரசர்கள் சமண மதத்தை ஆதரித்தார்கள். சேர, சோழ, பாண்டிய, பல்லவ நாடுகளில் 7 ஆம் நூற்றாண்டு வரை சமணம் செழித்து வளர்ந்தது. பின்னால் சமணத்தைப் பின்பற்றுவோர் தொகை குறையலாயிற்று. இப்போது இந்தியாவிலுள்ள சமணர்களின் எண்ணிக்கை சுமார் 20 லட்சம்.

சமணர்கள் வடமொழியிலும், தமிழிலும் இலக்கிய வளர்ச்சிக்குப் பெரும் தொண்டாற்றியுள்ளனர். தமிழிலுள்ள நன்னூல், அகப்பொருள் விளக்கம், யாப்பருங்கலக்காரிகை, யாப்பருங்கலவிருத்தி முதலிய இலக்கணங்களையும், பல நிகண்டுகளையும், நாலடியார், அறநெறிச்சாரம், பழமொழி, ஏலாதி முதலிய நீதி நூல்களையும், சிலப்பதிகாரம், சீவக சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி போன்ற பெருங்காப்பியங்களையும் இயற்றியவர்கள் சமணப் புலவர்களேயாவர்.

சமணத்துறவிகள் தங்கித் தவம் புரியும் ஆச்சிரமங்களை பள்ளிகள் என்பர். இவை கலைகளை வளர்க்கும் கலைக் கூடங்களாகவும் விளங்கின. சிற்பக் கலையை சமணர்கள் மிகச் சிறப்பாக வளர்த்தார்கள். நாடெங்கிலும் இவர்கள் கோயில்களையும், தூபிகளையும் கட்டினார்கள். தமிழ்நாட்டில் காஞ்சீபுரம், கரந்தை, கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி முதலிய இடங்களைச் சுற்றிலும் சமணர்களின் கோயில்களும் உருவச் சிலைகளும் நிறையக் காணப்படுகின்றன. (ஆதாரம்: குழந்தைகள் கலைக் களஞ்சியம்; தமிழ் வளர்ச்சிக் கழகம் தொகுதி நான்கு)

# சமண மதம் (ஜைனமதம் - JAINISM) பற்றி பகவான் சாயிபாபா

எல்லோரிலுமுள்ளது ஒரே கடவுள் என்ற உண்மையை ஜைனமதத்தைச் சார்ந்த மகாவீரர் கற்பித்தார். புலன்களை அவர்கள் வழியிலே செயற்பட விட்டால் பலவிதமான எதிர்த்தாக்கங்கள் ஏற்படும். புலன்களை ஒன்று சேர்த்து அடக்கினால்தான் தெய்வீகத்தின் தன்மையை உணரமுடியும். கண்கள் பார்க்கும் சக்தி உடையன. காதுகள் கேட்கின்றன. இவ்வாறே பார்ப்பது, கேட்பது, பேசுவது போன்ற சக்திகள் அனைத்தும் தெய்வீகத்திலிருந்து பெறப்பட்டன. புலன்களை அடக்கி அவற்றை ஒன்றிணைப்பவன் வெற்றி வீரன் ஆகின்றான். இதனை ஜைனர்கள் 'ஜினா' என்று அழைக்கிறார்கள். தனது புலன்களை அடக்கியதனால்தான் மகாவீரர் என்ற வெற்றிப் பட்டம் அவருக்கு (வர்த்தமானர்க்கு) கொடுக்கப்பட்டது.

(DIGEST BY: TUMULURU KRISHNA MURTY - FROM SANATHANA SARATHI - JAN 1992 P2)

## அன்புள்ள சந்தாதாரருக்கு

தயைசெய்து உங்கள் சந்தா முடிவதற்கு முன், சந்தாவை புதுப்பிக்குமாறு வேண்டுகிறோம்.

ஆசிரியர்
சாயி மார்க்கம்.

## செய்திகள்

### சாயி மந்திர் - பகுத்தித்துறை

இந்த நிலையத்திற்கான காணியையும் கட்ட டமும் பிரசாந்தி நிலையத்தில் வாழும் திருமதி. சுப்பிரமணியம் அவரது குடும்பம், இவர்களால் நன்கொடையாகத் தரப்பட்டது. இந்த காணியையும் கட்டடத்தையும் ஸ்ரீ சத்திய சாயி அறக்கட்டளை நிதியத்தின் பாதுகாப்பிற்கு, உறுதிமூலம் மாற்றுவதற்கு ஒழுங்குகள் செய்யப்படுகின்றன.

**ஸ்ரீ சத்திய சாயி மனித மேம்பாட்டு பயிற்சிக் கல்லூரி (கோப்பாய்):**

மனித மேம்பாட்டு கல்வி ஆசிரியர்களுக்கான பயிற்சிகள் நடைபெற்று வருகின்றன. மேலும் ஆர்வமுள்ள ஆசிரியர்களுக்கு தீவிர பயிற்சியளிப்பதற்காக ஒரு பயிற்சிக் கல்லூரி அமைக்க வட பிராந்திய சத்திய சாயி சேவா இணைப்புக் குழு தீர்மானித்துள்ளது. தெரிவு செய்யப்படும் ஆசிரியர்கள் இந்த நிலை யத்தில் ஐந்து வார இறுதி நாட்கள் தங்கி இருந்து இப்பயிற்சியை பெறுவார்கள். இப்பயிற்சிக் கல்லூரி அமைப்பதற்கான வேலைகளை, சமீபத்தில் பாங்கொக் மனித மேம்பாட்டு கல்லூரியில் டிப்புளோமா பட்டம் பெற்று திரும்பியுள்ள, வடபிராந்திய இணைப்புக் குழுவின் மனித மேம்பாட்டுக் கல்வி இணைப்பாளர் திரு. கே. வி. சிவனேசன் அவர்கள் கவனித்து வருகிறார்கள். இப்பயிற்சிக் கல்லூரிக்கான காணியையும் கட்டடத்தையும் இலங்கை சத்திய சாயி மத்திய சபை தலைவர் திரு. எம். வன்னியசேகரம் அவர்கள் தந்தையாரின் ஞாபகமாக கோப்பாய் பிரதான வீதியிலுள்ள தனது காணியை அன்பளிப்புச செய்கிறார். இக்கல்லூரியின் இயக்குனராக பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம் (நந்தி) அவர்கள் கடமையாற்றுவார்கள். தற்போது கட்டட திருத்த வேலைகள் நடைபெற்று வருகின்றன. விரைவில் ஆரம்பமாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**ஆண்டு - 1 ஆசிரியர்களுக்கான சத்திய சாயி மனித மேம்பாட்டு கல்வி பயிற்சிப் பட்டறை - மட்டக்களப்பு மாவட்டம்:**

மேற்படி பயிற்சிப்பட்டறை கோட்டைமுனை இந்துக் கல்லூரியில் ஜனவரி 29, 30 ஆகிய திகதிகளில் நடைபெற்றது. இப்பயிற்சிப் பட்டறையை சத்திய சாயி மனித மேம்பாட்டு கல்வி இணைப்பாளர் (தமிழ்) பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம் (நந்தி) அவர்கள் நடாத்தினார்கள். உதவிக்கல்விப் பணிப்பாளர் திரு. எஸ். சிறிகிருஷ்ணராஜா, Dr. சிவஅன்பு (கிழக்குப் பிராந்திய இணைப்புக்குழுத் தலைவர் ஆகியோர் கலந்து கொண்டனர். பேராசிரியர் அவர்களால் கைக்கொள்ளப்பட்ட பயிற்சி முறை எல்லோரையும் ஈடுபடுத்தியதால் எல்லோருடைய பாராட்டுதலையும் பெற்றது.

**இளைஞர்களுக்கான மனித மேம் பாட்டு பயிற்சிப் பட்டறை:**

இளைஞர்களுக்கான மனித மேம்பாட்டு பயிற்சிப்பட்டறை யாழ்ப்பாணம் நிலையத்தில் 26.03.2000 ஞாயிறு அன்று நடைபெற்றது. இப்பயிற்சிப் பட்டறை புதிய முறையில் பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம் அவர்களால் வடிவமைக்கப்பட்டது. முதலில் பேராசிரியர் அவர்கள் மனித மேம்பாட்டுக் கல்வியின் முக்கியத்துவத்தையும் அது பயிற்றுவிக் கப்படும் விதத்தையும் விளக்கிக் கூறினார். தொடர்ந்து மனித மேம்பாடுகள் குடும்பம், சாயி நிலையம், காரியாலயம், சமூகம் ஆகிய அமைப்புகளில் எவ்வாறு கடைப்பிடிக்கலாம் என இளைஞர்கள் குழுக்களாகப் பிரிந்து ஆராய்ந்தனர். ஈற்றில் குழுக்களின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு கலந்துரையாடப்பட்டது.


காருண்யா கணனி சேவை
நந்தாவில் ஒழுங்கை, தாவடி, கொக்குவில்

ஓம் ஸ்ரீ சாயிராம்

## 2000ம் ஆண்டில் (யூன் – டிசம்பர்) பிரசாந்தி நிலையத்திலும் இலங்கையில் உள்ள சாயி நிலையங்களிலும் கொண்டாடப்படும்

# விசேட தினங்கள்

| மாதம் | திகதி | கிழமை | வைபவம் |
|---|---|---|---|
| யூன் | 15-06-2000 | வியாழன் | நபிகள் நாயகம் பிறந்த தினம் |
| யூலை | 16-07-2000 | ஞாயிறு | குருபூர்ணிமா |
| யூலை | 23-07-2000 | ஞாயிறு | வலது குறைந்தோர் தினம் |
| ஆகஸ்ட் | 23-08-2000 | புதன் | கிருஷ்ண ஜெயந்தி |
| செப்ரம்பர் | 01-09-2000 | வெள்ளி | விநாயக சதுர்த்தி |
| ,, | 14-09-2000 | வியாழன் | பாலவிகாஸ் தினம் |
| ,, | 17-09-2000 | ஞாயிறு | இரத்ததானம் |
| ,, | 27-09-2000 | புதன் | சீரடி சாயிபாபா பிறந்த தினம் |
| ,, | 28-09-2000 | வியாழன் | நவராத்திரி ஆரம்பம் |
| ஒக்டோபர் | 07-10-2000 | சனி | விஜய தசமி |
| ,, | 20-10-2000 | வெள்ளி | அவதார பிரகடன தினம் |
| ,, | 26-10-2000 | வியாழன் | தீபாவளி |
| நவம்பர் | 11-11-2000 | சனி மாலை6 | அகண்ட நாம பஜனை ஆரம். |
| ,, | 12-11-2000 | ஞாயிறு ,, | ,, ,, நிறைவு |
| ,, | 19-11-2000 | ஞாயிறு | மகளிர் தினம் |
| ,, | 20-11-2000 | திங்கள் | S. S. E. H. V. தினம் |
| ,, | 23-11-2000 | வியாழன் | பகவானின் 75 வது பிறந்த தினம் |
| டிசம்பர் | 25-12-2000 | திங்கள் | கிறிஸ்மஸ் பண்டிகை |

## பகவான் புத்தர் சொன்னது

" அவன் என்னை நிந்தித்தான்
அவன் என்னை அடித்தான்
அவன் என்னை வென்றான்
அவன் என்னிடம் திருடினான் "

இப்படியான எண்ணங்களுக்கு
இடம் கொடுப்பர் மனத்தில்
குரோதம் தணியாது.

(தம்மபதம்: யாமக வாகா, செய்யுள் 3)